(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சியின்போது இந்த விதியை கடுமையாக கடைப்பிடிக்க வேண்டியதில்லை, மாவட்ட ஆட்சித் தலைவர்களே அந்தந்த இடத்திற்கு ஏற்ப விதிகளைத் தளர்த்தி ஆழ் குழாய் கிணறுகளை அமைக்கலாம் என்கிற வகையில் அரசு அனுமதித்து ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இதுகுறித்து ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது 800 ஆழ் குழாய் கிணறுகள் போடுகிறோம் என்றால் அதிலே 100, 80 கிணறுகள் அளவுக்கு தண்ணீர் வராமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதிலே எல்லாம் ஜாக்கிரதையாகத் தான் இருக்க வேண்டியிருக் கிறது. தக்க அறிவுரைகள் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களின் ஊதியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், பு. கோ. நாராயணன், ச. பால கிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சி மன்றங்களில் துப்புரவுப் பணியாளர்கள் நீண்ட காலமாக குறைந்த சம்பளத்தில் (மாதம் ரூ. 100) பணியாற்று வதால், துப்புரவுப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவ தில்லை என்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஊராட்சிகளில் பணிபுரியும் அனைத்து துப்புரவு பணியாளர் களும் பகுதி நேர பணியாளர்களே, மேலும் இதே போன்று ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள் மேல்தல நீர் தேக்கத் தொட்டி இயக்குபவர், (O. H. T. Operator) வானொலி இயக்குபவர், தொலைக்காட்சி இயக்குபவர், சுகாதார பணியாளர்கள் அனைவரும் பகுதிநேர பணியாளர்களே ஆவர். ஊராட்சி எல்லை குறுகிய விஸ்தீரணத்தில் உள்ளதால் முழுநேர துப்புரவு பணியாளர்கள் தேவை இருக்காது. துப்புரவு பணியாளர்களை முழுநேர பணியாளர்களாக ஆக்க தற்போது ஊராட்சி நிதி

நிலையும் இடம் தராது. ஊராட்சிகளின் நிதி நிலைமை, பணியாளர்கள் செய்யும் வேலையின் அளவு, காலத்தினைப் பொறுத்து மாவட்ட நிலவரப்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பிரதி மாதமும் நிர்ணயிக்கப்பட்ட ஊதியமாக ரூ. 100 பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே பகுதி நேர பணியாளர்கள் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. குறிப்பாக ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகிற துப்புரவு பணியாளர்கள் முழு நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பேரூராட்சி மன்றங்களிலும், நகராட்சிகளிலும், நகர மன்றங்களிலும் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளம் 600 ரூபாய் என்றும், அதேபோல பேரூராட்சிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு 350 ரூபாய் என்றும் வழங்கப்படுகிறது. அதையும் கருத்தில் கொண்டு, இந்த 100 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்கள் அடிப்படை தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை இருப்பதையும் கருத்தில் கொண்டு ஊராட்சி மன்றங்களில் துப்புரவுப் பணியாளர்களாக பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களும் தங்கள் நிதி வசதிக்கு ஏற்ப இவர்களுடைய ஊதியத்தை நிர்ணயம் செய்துகொள்ளலாம். அதற்கேற்ற வகையில் அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதாவது அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குதல், ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியர்களை நியமித்தல், சம்பளத்தை உயர்த்தி நிர்ணயித்தல், இப்படி பல்வேறு பிரச்சினைகள் அவர்களுக்கு இருப்பதால் இவைகளை எல்லாம் ஆய்வு செய்து, ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுடைய பணி நிலைமையை செம்மைப்படுத்த 'ஒர்க் நார்ம்ஸ் கமிட்டி' போன்ற ஏதாவது ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அளிக்கும் வகையில் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின்கீழ் வீடுகள் கட்டி தரும்போது ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற துப்புரவு பணியாளர்களுக்கும் வீடுகளை தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகளை ஒதுக்குவது பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். இப்பொழுது பணியாளர்கள் நிலைமை குறித்து ஆராய தனிக் குழு போடத் தேவையில்லை. அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கே நிலைமைக் கேற்ப அந்தந்த ஊராட்சி மன்ற ஊழியர்கள் நலன் சம்பந்தப் பட்ட பொறுப்பையும், ஊதிய உயர்வு, பணி நிலைமை குறித்த முடிவினையும் எடுக்கின்ற உரிமையும் இருக்க வேண்டும். எனவே அத்தகைய உரிமையை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது தான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே ஊராட்சி எல்லை குறுகிய விஸ்தீரணத்தில் உள்ளதால் முழு நேர துப்புரவு பணியாளர்கள் தேவையிருக்காது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் ஊராட்சி மன்றங்களின் எல்லைகள் குறுகிய விஸ்தீரணத்தில் இருக்கின்றன. ஆனால் பெரியார், கோவை போன்ற மாவட்டங்களில் ஒரு ஊராட்சி மன்றம் என்பது குறைந்தபட்சம் 20 ஊர்களைக் கொண்ட ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன. அதற்கு நிச்சயமாக ஒரு துப்புரவாளரே போதாது என்கின்ற நிலைமை இருக்கின்ற பொழுது அரசு இதைக் கவனத்திலே கொண்டு மேற்படி ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கி, அவர்களுக்கு மற்ற அரசுப் பணியாளர்கள் எந்த விகித அடிப்படையிலே சம்பளம் பெறுகின்றார்களோ அந்த விகித அடிப்படையிலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அதற்காகத்தான் குறிப்பிட்டேன். இதையெல்லாம் அந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள்தான் செய்வது நல்லது. ஏனென்றால் சில ஊராட்சிகள் சிறிய எல்லைக்கு உட்பட் டிருக்கும்; சில ஊராட்சிகள் பெரிய எல்லைக்கு உட்பட்டிருக்கும். அவர்கள் எவ்வளவு நேரம் பணியாற்றுகிறார்கள் என்பனத யெல்லாம் பொறுத்து ஊதியம் நிர்ணயம் செய்வது, தங்களுடைய நிதி நிலைமைக்கேற்ப நிர்ணயம் செய்வது என்பவை போன்ற வற்றையெல்லாம் அவர்களே மேற்கொள்ளுகின்ற வகையிலே அரசு உத்தரவு வழங்கும்.

(இ) திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதியின்மை

திரு. என்.எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் இல்லாமல் மாணவ மாணவியர்களுக்கு மரத்தடியில் பாடம் கற்பிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.